291

Regd. No. M. 878.

தொகுதி 10 பகுதி 10—11.

பூர்ணசந்திரோதயம்.

பிரஹ்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம்
இவைகளைப் பரவச்செய்யும்
ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை

1920௵ பிப்ரவரி மார்ச்சு௴
சித்தார்த்தி௵ மாசி பங்குனி௴

23 JUL 1920
MADRAS.

விஷயங்கள்.

தற்காலநிலைமை—ஆர். அரங்கசாமி ஐயர் பி. ஏ.	281
சாரணர் மலைச்சஞ்சாரம்—அ. ச. பெரியாழ்வார்	289
சிறுவர்பக்கம்—க்ஷமை—பி. எஸ். ராமசுப்பையர்	295
தென் இந்தியா நக்ஷத்திரக் கன்வென்ஷன்—அருண்டேல் பிரசங்கம்	300
குரு பக்தி—நஞ்சுண்டப்பா	304
உதயாதிசை தாரக சங்கம—ஹிரேந்திரநாத தத்தர்	316
ஹரிதாஸர்—ராமசந்திரன்	324
புத்தக விமர்சம்	288, 327

அ. அரங்கசாமி ஐயர் பி. ஏ., பி. எல். பத்திராதிபர்
தபால சார்ஜ் உள்பட வருஷச்சந்தா இந்தியாவுக்கு 2—0—0
அன்னிய நாடுகளுக்கு ரூ 2—8—0 தனிப்பிரதி அணா 4.
மதுரை விக்டோரியா அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பெற்றது
Copy-right Resoved.

புதிய புஸ்தகங்கள்.

சற்குரு பாதங்களில்—இரண்டாம பதிப்பு	0—2—0
சகோதரபாவம—பி. எஸ. ராமசுப்பையர்	0—1—0
குழந்தைகளைப பழக்கும் முறை—டி. ஏ. கோபாலசாமி நாயுடு	0—3—0
நம் குழந்தைகளும் நம் தேசத்து வருங்கால மகிமையும்—வி. ராமசந்திரையர்	0—1—0
நிவாஸபியால உள்ள பிரயோஜனங்கள்—வனங்குடி வி. ராமசந்திர நாயுடு	0—2—0
எல்லாம வல்ல ஈசன—கே. எஸ். ராமசந்திரையர் (சீக்கி ... யாகும்)	0—1—6
...ம்—ஷையார்	0—4—0

...று.
...பூர்ணசந்திரோதயம் ஆபீஸ், மதுரை.

அயக்காந்த திராவகம்.

இரும்பைப்பார்க்கிலும் கடினமான உலோகம் வேறொன்றுமில்லை தேக விர்த்திக்கு இதுவே சிறந்தது இதனால் தான் இனைத்தவன் இரும்பைத் தின்றால் கொழுத்தவன் பொன்னைத் தின்பான் என்று இவ்வுலகத்தில் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஒருவன் இந்த திராவகத்தை சாப்பிடுவதற்குமுன் தன் தேகம் எவ்வளவு நிறையுள்ளதென்று நிறுத்துக்கொண்டு அதன்பின் இந்த திராவகத்தை ஒரு மண்டலம் 40-நாட்கள் சாப்பிட்டு மறுபடியும் தராசில் நின்று நிறுத்துப் பார்ப்பானானால் ஏறக்குறைய முன்னிருந்ததற் கதிக நிறை இருப்பான் இதை ஒவ்வொருவரும் அனுபவத்தில்தெரிந்துக் கொள்ளலாம் தேக விர்த்தி இல்லாதவன் இரும்பைப் பழுக்கக் காச்சி அதை ஜலத்தில் துலைவத்து அந்த ஜலத்தை தினந்தோறும் குடித்துவந்தால நல்ல பலம் உண்டாகுமென்று வைத்திய சாஸ்திரங்கள் கூறுகின்றன அதற்கே அந்த குணம் இருக்கிறபோது அயத்தினுடையவும் காந்தத்தினுடையவும் சத்தை திராவகமாக இறக்கியிருக்கும் இந்த பரமௌஷதத்தை ஒருவன் உட்கொண்டால்அவன் தேகம் வஜ்ர சரீரம் போலாய்விடுமென்பதற்கு என்ன தடை

20-நாளைக்கு சாப்பிடக்கூடிய ஒரு புட்டியின் விலை ரூபா	1	8	0
40-நாளைக்கு சாப்பிடக்கூடிய புட்டி விலை	2	10	0

படங்கள். விலைசரசம். படங்கள்.

பிளாவட்ஸ்கி அம்மையார்	0—1—0
அன்னி பெஸண்டு	0—1—0
கர்னல் ஆல்காட்	0—1—0
தாமோதர மாவலங்கர்	0—1—0
ப. நாராயணையர்	0—1—0

தபாற்கூலியும் பாக்கிங்கூலியும் வேறு.

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ், மதுரை.

புதிய தினுசுகள்! சகாய விலை!!

சேலம், துயிலி, இன்னும் அநேகவித பல கரைகளில் 5- அல்லது 6-முழம் அங்கவஸ்திரங்கள். விலை ரூபா. 10, 12, 15, 20 வரையில்

☞ நிறம் வெள்ளை, லயிட்ரோஸ், பூநீலம், இன்னும் அநேகவித லயிட் கரைகளிலும் அகப்படும். ஒரு முறை எங்களுக்கு ஆர்டர் செய்தால் உண்மை தெரியவரும்.

கிரய ஜாப்தா இனாம்.

சர்மா அண்டு கோ., ஸ்ரீ காசி.

SARMA & COMPANY,

SILK MERCHANTS & MANUFACTURERS, *Benares City.*

இந்தியாவில் மிகப்பெரிதும் பழமையுமான வைத்யசாலை எது?

1881-ஹூம் ஜாம்நகரில் ஸ்தாபிக்கப்பட்ட

ஆதங்கநிக்ஹர ஔஷதாலயம்.

குழந்தைகளுக்கு சகலரோகங்களையும் குணப்படுத்தும்

சஞ்சீவி

பாலமித்ர

300 மாத்திரை கொண்ட டப்பி 1-க்கு ரூபா 1

வியாதியைப்பற்றி விபரமாய்தெரிவிப்போர்க்கு நன்ருய் ஆலோசனைசெய்து திருப்தியான விடை கொடுக்கிறோம்.

கடிதங்களுக்கு உடனே பதில் எழுதப்படும்

இநத

ஔஷதாலயத்தில் விருத்த வைத்திய பாரங்கதரும், வித்தியா பட்டம்பெற்ற மேதாவிகளும், சாஸ்திர சம்பன்னர்களும் திறமை வாய்ந்த அதிகாரிகளுமாக நூற்றுக்கணக்கான ஜனங்கள் உத்தியோகம் செய்கிருர்கள்.

மூதன்மையான

மருந்து சென்ற 35 வருஷகாலமாய் உபயோகிப் போருக்கு அற்புத குணத்தைக் கொடுத்து தேகபலத்தையும் மனோவன்மையையும் கொடுத்துப் பெரும்புகழ் படைத்திருக்கிற ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

32 மாத்ரையின் விலை ரூ 1

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜீ
ஆதங்க நிக்கிரக ஔஷதாலயம்
45, மேலக் கோபுர வீதி
மதுரை.

இருமல், கபம் காசம் இவைகளுக்கு சிறந்தமருந்து

காசாந்தக

மாத்ரைகள் டப்பி1க்குவிலை ரூ 1

இதுவரை எங்கள் கேட்லாக்கை பார்த்திராவிடில் உடனே உங்கள் விலாசத்தை எழுதுங்கள் எவ்வித செலவில்லாமலும் இனமாய் அனுப்புகிறோம்

உ

ஸ்ரீ ராமஜெயம்.

புது ஜவுளிக்கடை நோட்டீஸ்.

மு. ரா. பெருமாளய்யர்

மேலக்கோபுரவாசல்தெரு, மதுரை

மதுரை மேலக்கோபுரவாசல் தெரு டோர் நம்பர் 113, தென்சரகில் முன் டிப்டி கலெக்டராயிருந்த மகா-ா-ஸ்ரீ ராமாராயரவர்கள் பெரியமாடி கிரஹத்தில் ஏற்படுத்தியிருக்கும் ஜவுளிக்கடையில் அநேக ஊர்களிலிருந்து வரும் பட்டுச்சேலை, சித்தாடை, பாவாடை, ரவிக்கைகளும், பட்டுக் கரையிலும், சாதாவிலும், ஜரிகையிலும், வேஷ்டி ஜோடி, துப்பட்டா, தினுசுகளும், உள்ளூரில் தயாராகும் ஜரிகை சாதா, டோரியா, கன்னடி, சேலை, சித்தாடை, ரவிக்கை தினுசுகளும் 150, 200 நம்பர் நூலில் ஜரிகைஜோடி, துப்பட்டாக்களும், சாயவேஷ்டி, தினுசுகளும் இன்னும் அநேக ஜவுளி தினுசுகளும் விலை சலீசாகவும் நயமான ஜவுளிகளாகவும் சொற்பலாபத்திற்கு விசேஷ வியாபாரம் செய்து கொண்டு வருகின்றமையால் தேவையானவர்கள் எங்கள் ஜவுளிக்கடைக்கு வந்து வேண்டிய தினுசுகளை வாங்கிக் கொள்வீர்களென்று எதிர்பார்க்கிறோம்.

☞ N. B.—அயலூர்களிலிருந்து கடிதமூலமாய் வரும் ஆர்டர்களை உடனே கவனித்து அதிக பந்தோபஸ்தாய் வி. பி. பார்சல் மூலமாய் ஜவுளி தினுசுகள் அனுப்பப்படும். எங்கள் ஜவுளி விலை விபர ஜாப்தா (கேட்லாக்) வேண்டுமானால் இனாமாய்ப் பெற்றுக் கொள்ளலாம்.

வைத்யரத்ன பண்டிட் டி. கோபாலாசார்லு அவர்களின் சிறந்த ஆயுர் வேத ஔஷதங்கள்.

சமூசன்ப்பரீட்சிக்கப்பட்டது !

சென்ற இருபத்தைந்து வருஷங்களாக எல்லோராலும் உபயோகிக்கப்பட்டது !!

பிளேக் மருந்து.

1. எல்லாவித பிளேக் ஜ்வரங்களுக்கும் ஸஞ்சீவினி இதுவே.

2. முன் சாப்பிட்டால் பிளேக் வியாதியை வராமல் தடுக்கும்.

விலை பெரியசெட் ரூ 2—2—0
,, சிறிய ,, ரூ 1—6—0

ஜீவாமிருதம்.

1. ஹிந்து தேசத்தில் நல்ல மூலிகைகளாலும் உலோகங்களாலும் தயார் செய்யப்பட்டது

2. ஆரோக்கியத்தையும் தைரியத்தையும் உண்டாக்கும்.

3. பலத்தையும் உத்ஸாகத்தையும் விர்த்தியாக்கும்.

விலை பெரிய சீசா ரூ 3—4—0
,, சிறிய ,, ரூ 1–12—0

காலரா மருந்து.

1. இந்த ஔஷதத்தினால் காலரா விலகிப்போகும்.

2. சீக்கிரத்தில் வாந்தியையும் பேதியையும் போக்கும்.

விலை பெரிய செட் ரூ 1—2—0
,, சிறிய ,, ரூ 0–12—0

அமிருதாமலக தைலம்.

1. வித்யார்த்திகளுக்கும் போசனை ஜாஸ்தியுள்ளவர்களுக்கும் அதிக உபயோகமானது

2. நேத்திர ரோகிகளுக்கும் சிரோ ரோகிகளுக்கும் ரொம்பவும் ஹிதமானது.

விலை பெரிய புட்டி ரூ 1—0—0
,, சிறிய ,, ரூ 0—8—0

பலவித வியாதிகளுக்கும் இவ்விடத்தில் மருந்துகள் கிடைக்கும். காட்லாக்கு இனாமாக அனுப்பப்படும்.
தபால் சார்ஜூம், பாக்கிங் கூலிகளும் பிரத்தியேகம்.
வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு
எழுதிப் பெற்றுக்கொள்ளவும்:—

மானேஜர்,
ஆயுர்வேதாசிரமம்,
55, ஆச்சாரப்பன் தெருவு,
மதராஸ்.

ஜகப் பிரசித்திபெற்ற

ஜின்டான்மாத்திரை.

எண்ணிலாக்குணங்கள் நிரம்பிய இந்த ஜின்டானை இப்போதே உபயோகியுங்கள். எல்லாக் காலத்திலும் யாவராலுமே நன்கு மதிக்கப்பெற்று எங்கெங்கும் பரவி பல பல வியாதிகளைக் கண்டித்தும் ஆரோக்கியத்திற்கும் ஆனந்தத்திற்கும் கைகண்ட முக்கியவிசேஷ குளிகைகள். இன்புளுயென்சா முதலிய கொடிய தொத்து வியாதிகளை அணுக வொட்டாமல் தடுப்பதற்கு இம் மாத்திரைகள் நிரம்பவும் குணமானவைகள்.

யாவரும் சுலபத்தில் அடையவேண்டி எல்லாக் கடைகளிலும் வியாபாரிகளிடத்திலும் எப்போதுமே விசாரிக்கப் பெறலாம் விலைபோ சரசம்.

265 மாத்திரையும் கண்ணாடி பதித்த அந்தமான டப்பியுள்ள பாக்கெட் ரூ. 1. 75 மாத்திரையும் சாதா டப்பியுடன் பாக்கெட்டுக்கு 4 அணா. 15 மாத்திரை பொட்டணம் 1 அணா.

ஹோல் ஏஜண்டுகள்:—

எஸ் வைத்தியா அண்டு கோ

மதராஸ்.

பிராஞ்சிகள்:—திருச்சிக்கோட்டை & பங்களூர் ஸிடி. & கொழும்பு

N. B. ஸகல குடும்ப மருந்துகள், பேடெண்டுகள், டாயிலட்கள், பாலாமிருதம், மேலான பன்னீர், பல்பொடி, கூந்தல் தைலம், இங்கோ எஸ்ஸென்ஸ், பித்தளை மெழுகு வத்தி ஸ்டாண்டுகள், முதலிய பலவகை சுதேசிய சாமான்களுக்கும் ஏஜண்டுகள்.

எங்கள் மதுரை ஏஜண்டு:—

V. தில்லைகிருஷ்ணா நாயுடு,

ஸ்ரீ கிருஷ்ணராஜா அண்டுகோ, மேலக்கோபுர வீதி மதுரை

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி	சித்தார்த்தி௵ மாசி-பங்குனிமீ	பகுதி
10	1919௵ பிப்பிரவரி-மார்ச்சுமீ	10-11

தற்கால நிலைமை.

தென் இந்தியாவில் ரஸிகர்கள் எல்லாரும் அபிமானிப்பது ஹரிகதா காலக்ஷேபம். சிற்சிலர் நாடகங்களை விரும்புகிறார்கள். ஆனால் சிலரோ ஸ்திரீகள் புருஷ வேடம் தரிப்பதும், புருடர் ஸ்திரீ வேடம் போடுவதும், பார்ப்பது சாஸ்திரவிரோதம் என்கிறார்கள். ஒரு சிலர் நாடகங்களுக்குச் செல்வதால் சிற்றின்ப விஷயமான பற்றுதலே அதிகரிக்கும் என்றும், ஆகையால் ஜனங்கள் கெட்டுப்போவர்களென்றும் கருதுகின்றனர். வேறு சிலர் இரவில் கண்விழிப்பது ஆரோக்கியத்திற்கு ஆனி என்கின்றனர். ஆனால் ஹரிகதா காலக்ஷேபங்களிலோ யாவரும் அபிநிவேசம் உள்ளவர்களாயிருக்கின்றனர். பக்தியை அடிப்படையாய் உடையதாலும், சங்கீதத்தை உதவியாய்க்கொண்டிருப்பதாலும், கதை ரூபமாய் மனதைக் கவரச் செய்வதாயிருப்பதாலும், யாவரும் ஹரி கதையில் பிரியப்படுகிறார்கள். ஆனால் ஹரி கதைகள் நடத்தும் முறைகளிலாவது, ஹரி கதைகளைச் செய்யும் பாகவதர்களின் தன்மையிலா

வது, ஒரு விதமான சீர்திருத்தமானது செய்ய வேண்டியது கிடையாது என்பது இல்லை. ஹரி கதைகளைக் கேட்கும் புத்திமான்களில் அனேகர், "அவை வர வர சங்கீதக் கச்சேரியாகவே முடிகின்றன வென்றும், பக்திரஸம் மலிந்து பெருகவேண்டியிருக்க, அது மெலிந்து கிடக்கின்றது என்றும், ஹரி கதை கேட்கச் சென்றவன் கேட்டுத் திரும்பும்போது முன்னைவிட சீர்திருந்திய மனத்தனாய், உருகிய உள்ளத்தனாய், பக்தியில் பரவசனாய்க், காணப்படவில்லை யென்றும், பாகவதர்களும் பெரும்பான்மையாய் லௌகிக சித்தாளுக்களாயும், சாமர்த்தியசாலிகளாயும், வாசாலகர்களாயும், சங்கீத வல்லுனர்களாயும காணப்படுகிறார்களே யொழிய, உண்மையில் பகவானிடத்தில் ஈடுபட்டவர்களாய், அவரது தொண்டர்களாய், சாந்தமான மனத்தராய், சுரோதாக்களுடைய நமஸ்காரத்திற்கு யோக்கியர்களாய், தூய நடத்தையராய் காணப்படவில்லை" யென்றும் கூறுவதை நாம் அடிக்கடி கேட்கிறோம். ஆனால் எல்லா பாகவதர்களும் அப்படியில்லையென்று அறியச் சந்தோஷப்படுகிறோம். பாகவதர்களுக்கு இருக்கவேண்டிய லக்ஷணங்கள் பொருந்தியவர் இன்னும அநேகர் இருக்கின்றனர். அப்படிப்பட்டவருடைய சங்கியை அதிகமாவது தேசத்திற்கு க்ஷேமகரமானது.

***

மேலும், ஸ்திரீகளும் புருஷர்களும் ஹரி கதைகளைக் கேட்கிறார்கள். ஹரி கதைகளைக் கேட்கும்போது மேலான உண்மைகள் மனதில் எளிதில் பதியக்கூடியவையாயிருக்கின்றன. ஏன் என்றால், ஹரி கதை ஆரம்பிக்கும் முன் பாகவதர் குருவை ஸ்மரித்து பகவானை ஸ்தோத்திரம் செய்கிறார். தம்பூரா முதலிய சுருதி வாத்தியங்களைச் சப்திப்பதால் கேட்போர் மனது ஒரு நிலைப்படுகிறது. அப்போது சொல்லும் வார்த்தைகளை மனது ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறது. ஆகையால் பாகவதர்கள் உயர்ந்த உண்மைகளைச் சொல்வார்களானால் ஜனங்கள் நன்றாய் ஏற்றுக்

கொண்டு தம்முடைய நடத்தையை அதற்கேற்ப மாற்றிக் கொள்வார்கள். ஹரிகதா காலக்ஷேபங்கள் நன்மை பயப்பதற்கு உயர்ந்த சாதகமாகும்.

***

இதையெல்லாம் உத்தேசித்து பங்களூரில் ஹரி கதா காலக்ஷேபக் கான்பரன்ஸ் கூட்டம் வருகிற மே மாதத்தில் கூடப்போவதாகவும் தென் இந்தியாவில் உள்ள முக்கிய பாகவதர்கள் எல்லாரும் அழைக்கப்படுவார்களென்றும், அதற்காக முக்கியஸ்தர்கள் அநேகர் கூடி ஒரு கமிட்டி யேற்படுத்தியிருக்கிறார்களென்றும், காரியதரிசியாயமைந்துள்ள ஸ்ரீமான் ஜி. ஆர். ஜோஸ்யர் எம். ஏ. பத்திரிகைகளில் எழுதியுள்ளார். இது மிகவும் உபயோகமான காரியம்.

***

பார்லிமெண்டுகளுக்கெல்லாம் தாய் என்று புகழ்ப் பெற்ற லண்டன்மாநகரத்தில் வீற்றிருக்கும் பார்லிமெண்டு சபையில் முதன் முதலாய் அமர்ந்த ஸ்திரீ அங்கத்தினர் முதன் முறை பிரசங்கம் செய்ததை உலகத்தார் ஆவலுடனும் கவனத்துடனும் ஏற்றது ஆச்சரியமில்லை. அப்பிரதம அங்கத்தினரின் பெயர் அலாஸ்டர் பெருமாட்டி. சண்டை முடிந்துவிட்டதாகையால் மதுபான திரவியங்களின் விற்பனை விஷயமாயும், அவைகள் எவ்வளவு காரமானவைகளாய் விற்கப்படவேண்டும் என்ற விஷயமாயும் யுத்த காலத்தில் ஏற்பட்டிருந்த நிர்ப்பந்தங்களை எல்லாம் நீக்கவேண்டும் என்று ஸர் ஜான் ரீஸ் பிரேரேபித்தனர். அதை அலாஸ்டர் பெருமாட்டி ஆக்ஷேபித்துப் பேசினதுதான் முதல் முதல் அவ்வம்மணி அச்சபையில் பேசின சமயம். குடிக்கவும், குடிப்பதால் கெட்டுப்போகவும் கூட மனிதனுக்கு அதிகாரமும் உரிமையும் உண்டு என்று சேலியாய்ப் பேசினார் ஸர் ஜான் ரீஸ். "மனிதர்களுக்கு பாத்தியமிருக்கட்டும், இல்லாமற்போகட்டும். அவர்களைப்பற்றி நான் அவ்வளவு கவலைப்படவில்லை. அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைக

ளுக்கு ஏதாவது உரிமைகள் இல்லையா? பெரியோர்கள் குடிப்பதைக் கண்டு எத்தனை குழந்தைகள் கெட்டுப்போகின்றன. மேலும், குடியினால் இரத்தமே விஷம்கொண்டு கெட்டுப்போனவர்களுடைய குழந்தைகள் பிறக்கும் தருணத்திலேயே கெட்ட இரத்தத்தையுடையவைகளாய் சீக்கிரம் குடியால் இழுக்கப்படக் கூடியவர்களாய், பற்பல வியாதிகளுக்கு இரையாகக் கூடியவர்களாய் ஆகிறதாய் சாஸ்திர அறிஞர் கூறுகின்றனர். அதை கவனியுங்கள்." என்று இனிய குரலுடன் அப்பெரிய சபையின் எப்பாகத்திலும் கேட்கும்படி பேசினார். அவரது வார்த்தையால் அச்சர்ச்சையே மிகவும் கம்பீரமாய்ச் செய்யப்பட்டதாம். முதன் முதல் ஸ்திரீ அங்கத்தினர் பேசவாரம்பித்தது லோக க்ஷேமத்தை அபிவிருத்தி செய்யும் உயர் விஷயத்தைப் பற்றி ஏற்பட்டதே எனச் சந்தோஷிக்கிறோம். குடிப்பது சர்வ சாதாரணமாயிருக்கும் இங்கிலாந்திலேயே இவ்வளவு கெடுதி குடியினால் வருகிறது என்று வெளியாகிறதே. தொன்றுதொட்டு அநேகமாயிரம் பரம்பரையாய் மதுபானத்தால் கொஞ்சமும் கெடுக்கப்படாத இரத்தத்தையுடைய இந்துக்களில் சிலர் தாத்காலிக சுகம் என்ற காரணத்திற்காக மதுபானம்செய்து தங்கள் ஆயுளைக் குறுக்கியும் தமக்கு பிறக்கும் அருமை மக்களின் இரத்தத்தையும் கெடுக்கிறார்களே அந்தோ! இது எவ்வளவு பரிதாபம்!

***

புண்யபுரி என்ற புனா நகரத்தில் பிப்பிரவரிமீ 1௳ யன்று அந்நகரத்து முனிசிபல் அக்கிராசனரிடம் தங்களுடைய கோரிக்கையைத் தெரிவிப்பதற்காக ஸ்திரீகளின் பிரதிநிதிகள் சென்று தெரிவித்தன. ஜஸ்டிஸ் ரானடேயின் மனைவியாரும், புனா சேவாஸதனத்தின் காரியதரிசியுமான ஸ்ரீமதி ஜானகிபாய் பட்டு அம்மாளும், இன்னும் பலரும் சென்று "ஆண்பிள்ளைகளுக்கு மட்டும்கட்டாய இலவசக் கல்வி கொடுப்பது போதாது. பெண் பிள்ளைகளுக்கும் ஆண் பிள்ளைகளுக்குமே கட்டாய இலவசக் கல்வி கொடுக்கவேண்டும்.

பணம் போதாது என்று பெண் பிள்ளைகளுக்கு கட்டாயக் கல்வி கொடுக்கும் விஷயத்தை பிற்காலத்தில் பார்ப்போமென்று சொல்ல நியாயமேயில்லை. ஒரு பாலார் படிப்பாளிகளாயும் மற்றொரு பாலார் படிப்பிலிகளாயும் இருப்பதால் தேசத்திற்குக் கெடுதியே யொழிய வேறில்லை. இருதிறத்தாருக்கும் கட்டாயக் கல்வி புகட்டமுடியாதென்றால் பெண் பிள்ளைகளுக்குக் கட்டாயக்கல்வி கொடுப்பது தான் முதற்கடமை. ஆண் பிள்ளைகளுக்குப் பின்னால் வேண்டுமானால் பார்த்துக்கொள்ளலாம்" என்று கம்பீரமாய்ப் பேசினார்கள். இதற்கு முன்னாக ஒவ்வொரு நாளும் புனா நகரத்தின் பற்பல பாகங்களில் இவ்விஷயமாகவே ஸ்ரீமதி ரானடே முதலிய ஸ்திரீ ரத்தினங்கள் உபந்யாசங்கள் செய்து வந்தனர் என்று பத்திரிகைகளிற் படிக்கிறோம். புனாவில் ஸ்திரீகளின் கல்வி அதிகம் என்று நாம் சொல்லவேண்டியதில்லை.

***

ஆனால், ஆச்சரியம் என்னவென்றால், அப்புனா நகரத்திலேயே ஒரு பெரிய ஸதஸ்ஸில், அநேக படிப்பாளிகளும் வித்துவான்களும் கூடிய மகாநாட்டில், அவ்வூர் முக்கியஸ்தர்களில் ஒருவரான ஸ்ரீமான் என். ஸி. கேல்காரின் குமாரியான ஸ்ரீமதி கமலாபாய் தேச பாண்டே என்ற பெண்மணி ஸ்திரீகளுக்குக் கட்டாயக் கல்வி கொடுக்கவேண்டியதின் ஆவசியகத்தைப்பற்றிப் பேச ஆரம்பித்த போது அச்சபையில் வீற்றிருந்தோர் அநேகர் கூக்குரலிட்டு அவ்வம்மணியைப் பேசவொட்டாமல் தடுக்க முயன்றதாயும், அவர் பேசுவது 'வெட்கம்' 'வெட்கம்' என்று உரக்கக்கூவியதாயும், ஆனால் அக்கூக்குரலால் மனம் தளராது திடமான சித்தத்துடன் அவ்வம்மாள் அச்சபை நடுவே நின்று அக்கூக்குரலை அடங்கும்படி செய்து தம்முடைய பிரசங்கத்தை இனிது முடித்தார் என்று கேட்கச் சந்தோஷம். ஒரு சபையினின்று பேசுவது அநேகருக்கு அச்சத்தையும், சங்கோசத்தையும் தருகிறது. அதிலும் எதி

ராளிகள் நிறைந்த பெரிய ஆண்பிள்ளைகளுடைய மகாநாட்டில் ஒரு யுவதியான பிராமணப் பெண் பேசி முடித்தது யாவரும் போற்றத்தகுந்தது. ஆனால் படிப்பாளிகள் என்ற பொய்ப்பெயர் கொண்ட அச்சபையில் வீற்றிருந்து கூக்குறலிட்டவர்களை எங்ஙனம் கண்டிப்பது! மைத்திரேயி சார்க்கி முதலிய ஸ்திரீ ரத்தினங்கள் சபையிற் பேசியதை மறந்தனரோ இவர்.

***

மார்ச்சு மீ 13உயன்று காலையில தென்னார்க்காட்டு ஜில்லா பிரஹ்ம ஞானக் கான்பரன்ஸானது சொரத்துப் பெரியாங்குப்பத்தில் ரிடையர்டு ஸப்ஜட்ஜு பிரஹ்மஸ்ரீ ராமச்சந்திரராயர் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. கனம் ஹைகோர்ட்டு ஜட்ஜு பிரஹ்மஸ்ரீ ஸதாசிவையர் அவர்களும் அவ்வமயம் அங்கு விஜயஞ்செய்திருந்தனர். பிரஹ்மஞான சபைத் தலைவராகிய மாதுஸ்ரீ பெஸண்டு அம்மாளவர்கள் அச்சமயத்திற்காக வென்று தம்முடைய ஆசீர்வாதத்தை அனுப்பியிருந்தனர். அது இக்காலத்திற்கு ஏற்ற புத்திமதி நிரம்பியதாய் உற்சாககரமாயிருப்ப யாவரும் நன்கு நிதானித்துக் கவனித்து ஏற்றுக்கொள்ளத்தக்கது.

***

“இது மிகவும் கஷ்டமான காலம். செய்யவேண்டிய வேலையோ மிகவும் கடினமானது. ஆனால் நமக்குப் பின்னர் வருபவர் நம்மைக்காட்டிலும் பரிசுத்தமான காலத்திலிருக்கும்படி செய்யவும், தம்முடைய மேன்மையான சீலத்தை எளிதில் விளக்கவும் இயலும்படி செய்யும் என்பதை நாம் கருத்திற் கொள்வோமாக! குருட்டு பக்தியையும மித்தியா ஞானத்தையும் கொண்டவர்கள் நம்மை வைதால் என்ன அவமதித்தால் என்ன அவைகளை நம்மேல் ஏற்றுக்கொள்வதற்காகத் தானே நாம் முன் அனுப்பப்பட்டுள்ளோம். இக்காலத்திற்குறிய கஷ்டங்களாயமைந்துள்ள பாகங்களைக் கழித்த பின்னர் தான் புதிய காலத்தின் புதிய நாகரீகத்தின் அமைப்பு வெளிப்படும். இப்

பாரத வருஷத்தின் மஹானீயர்களான ரிஷிகளின் தொண்டு மிகவும் புனிதமானது. தடங்கல்களை யெதிர்த்தும் தொண்டு புரிவது எவ்வளவோ மேன்மையைப் படைத்தது. நாமோ ஜோதியின் ஸேவகர்கள், நமக்கு ஜயம் நிச்சயம். நம்முடைய தலைவர்களை நாம் அறிவோம். நம்முடைய சேனாபதியிடம் நமக்குப் பூரண நம்பிக்கையுண்டு. நம்முடைய துவஜத்தில் உதய திசை நக்ஷத்திரம் பிரகாசிக்கின்றது. அதுவே நம்மிந்தியா நாட்டின் நக்ஷத்திரமாகவும் அமைந்திருப்பது இன்னும் விசேஷமே. நமக்குப் பயமேயில்லை, சந்தேகமும் கிடையாது. நாம் செல்லவேண்டிய இடத்தையும் செல்லும் வழியையும் நாம் அறிவோம். ஆகையால் நம்முடைய ஹிருதயத்தில் பரமாத்மாவின் சாசுவதமான சாந்தியை அடைந்து அமைதியாயிருப்போமாக!"

***

சொரத்தூர் பெரியாங்குப்பம் சிறிய ஊர் எனினும் அங்கிருக்கும் பிரஹ்ம ஞானக்கிளைச் சபை யங்கத்தினர் ஆங்கிலக்கல்வி பயின்றவர் அன்று எனினும், அக்கிளைச் சபையின் முயற்சிகள் மிகவும் பாராட்டற் பாலன. அக்கிளைச் சபையோர் தவறாது ஒவ்வொரு வருஷமும் அடையாற்றுக் கன்வென்ஷனுக்குச் சென்று ஆங்கிருந்து பிரவகிக்கும் ஞானாமிருதத்தைப் பருகி வருகின்றனர். அதனால் சேவையே தருமம் எனக்கண்டு கொண்டிருக்கின்றனர். அவர்கள் தனிகர்களில்லை யெனினும் ஒரு இராப் பள்ளிக்கூடம், ஒரு பஞ்சமர் பள்ளிக்கூடம், ஒரு ஆண்பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடம் ஆகிய இம் மூன்றையும் செவ்வனே நடத்துகின்றனர். தவிரவும் சாரணர் சங்கமும் இந்திய ஸ்திரீகளின் கிளைச்சபையும் அவ்வூரில் இச்சபையார் முயற்சியில் நடைபெறுகின்றன. இச்சபையாரின் முயற்சி இன்னும் விருத்தியாகுக!

ஆர். ரெங்கசாமி ஐயர்.

புத்தக விமர்சனம்.

சகோதர தத்வம் அடையாறு புஸ்தகசாலை பி. எஸ். ராமசுப்பையர் இயற்றியது விலை அணா 1. பூர்ணசந்திரோதயம் ஆபீஸுக்கு எழுதிப் பெறுக. 1½ அணா ஸ்டாம்பு அனுப்பினால் ஒரு பிரதி அனுப்பப்படும். பன்னிரண்டு பிரதிகளின் கிரயம் 0—11—0

இந்திய வாலிபச் சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீமான் கே. ஜி. சிவசுவாமி ஐயர் பி. ஏ. அவர்கள் அச்சங்கத்தின 1-வது பிரசுரமாக வெளியிட்டிருக்கிற இத்துண்டுப் பத்திரிகையைப் படிக்க மிகவும் சந்தோஷப்பட்டோம். நமது பத்திரிகையில் அடிக்கடி ஸ்ரீராமசுப்பையருடைய கட்டுரைகளும் கதைகளும் வெளிவந்திருப்பதால் அவருடைய மேலான நோக்கங்களும் சொல்லினிமையும் நேயர்கள் அறிந்தவையே. எப்படிச் சகோதரபாவத்தை நடத்தையில் ஒவ்வொரு மனிதனும் ஸ்திரீயும் வெளிப்படுத்துவது என்பதை இச்சிறு புஸ்தகத்தில் ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார். ஸ்ரீமான் ராமசுப்பையர் எழுதும் எல்லாப் பிரசுரங்களிலும் பொதுவாய்க் காணப்படும் தன்மையாகிய உண்மை உணர்வானது இத்துண்டுப் பத்திரிகையில் விசேஷமாய்க்காணக் கிடைக்கின்றது. இதனை ஒரு முறை வாசித்தோன் கூட தன்னிடம் வெளிப்படப் பிரகாசிக்காமல் புதைந்து கிடக்கும் சகோதர உணர்வை வெளிக்காட்டாமலிரான் என்று திண்ணமாய்க் கூறுவோம்.

12 புத்தகங்களாக வாங்கி இனாமாகப் பலருக்குக் கொடுத்துதவுவது ஒரு சிறந்த கைங்கிரியமாகும்.

சாரணர் மலைச் சஞ்சாரம்.

கிழக்குத் திசையில் சிறிது சிறிதாக வெளிச்சம் அதிகரித்துக் கொண்டு வந்தது. ஆகாயமோ கருமேகங்களால் மூடப்பட்டிருந்தது. மழை தீவிரமாய்ப் பெய்து கொண்டே இருந்தது. அப்பொழுது சிலபேர்கள் ஒருமார்க்கமாகப் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்கள் சுமார் இருபது பேர்கள் இருக்கலாம். அவர்களில் சிலர் பெரிய பாத்திரங்களைச் சுமந்து கொண்டு சென்றனர். சிலர் சிறிய மூட்டைகளைத் தாங்கிப் போனார்கள். அவர்களின் உடுப்புகளோ சிப்பாய்களின் உடுப்புகள் போலிருந்தன. ஆனால் அவர்களது உயரத்தையும், வயதையும் கவனித்தபோது அவர்கள் சிப்பாய்கள் அல்லவென்று தெரிய வந்தது. மழையினால் அவர்களின் உடைகள் நனைந்து தண்ணீர் சொட்டினாலும், அவர்கள் சிறிதும் மனக்கவலை இல்லாமல் சிரித்த முகத்துடன் விரைவாய்ப் போய்க்கொண்டிருந்தார்கள். அவர்கள் யாரென்று ஊகித்தறியுங்கால் கடைசியில் சாரணச் சிறுவர்கள் என்று தெரிந்தது.

அந்தச் சாரணர் மதனப்பள்ளி கிருஷ்ண சாரணப்பட்டாளத்தைச் சேர்ந்தவர்கள். ஒரு நாள் அவர்கள் ஏதாவதொரு மலைக்குப் போய், அவ்விடத்தில் சாப்பாடு தாமே செய்து சாப்பிட்டு உல்லாசமாக விருந்து வரவேண்டுமென்று தீர்மானித்தார்களாம். முதல் நாளில் சாப்பாட்டுக்கு வேண்டிய சாமான்கள் வாங்குவதற்கு ஒவ்வொரு சாரணரும் அவனுடைய சக்திக்கேற்ப பணம் கொடுத்தார்கள். உடனே சாமான்களும் வாங்கப்பட்டன. அன்று மாலை மழை ஆரம்பித்தது. மறுநாள் காலையிலும் மழை வருமோவென்று பயந்து சிலர் மலைக்குப் போவதைத் தடுத்தார்கள். ஆனால் சாமான்களை வாங்கின பிறகு பிரயாணத்தை நிறுத்துவது தக்கதல்ல வென்றும், எப்படியும் போயே

தீரவேண்டுமென்றும் சிலர் உறுதி கொண்டார்கள். மறு நாள் காலையில் கருமேகங்கள் ஆகாயத்தில் உலாவித்திரிந்து கொண்டிருந்தன. மழையதிகமாக வரும்போல் தோன்றிற்று. ஆனால் அந்தச் சாரணர் சிறிதும் பின் வாங்கவில்லை. சமையல் செய்வதற்கு வேண்டிய பாத்திரங்களை எடுத்துக் கொண்டார்கள். சாமான்கள் அதிகமாக இருந்தும் வண்டியொன்றும் பேசாமல் அவர்களே அவற்றைச் சுமந்து கொண்டு போனார்கள். பங்களூர் மார்க்கமாகச் சிறிது தூரம் போனதும் மழை பொழிவதற்கு ஆரம்பித்தது. அவர்களின் உடைகளெல்லாம் நனைந்து விட்டன. சமையல் செய்வதற்கு அரிசியை ஒரு பெரிய பாத்திரத்தில் போட்டு வைத்திருந்தார்கள். அது மாத்திரம் நனையாதவாறு அதன்மேல் ஒரு பெரிய பாத்திரத்தைக் கவிழ்த்து எடுத்துக் கொண்டு போனார்கள்.

பிறகு அவர்கள் ஒற்றையடிப் பாதையாகச் செல்ல நேர்ந்தது. அந்தக் குறுக்குப் பாதையில் சிறிது தூரம் போன பிறகு, ஒரு சிறு கிராமம் காணப்பட்டது. அந்தக் கிராமத்துக்கு வெளியிலிருந்த ஒரு சாக்சார் கிணற்றினருகே யாவரும் சிறிது தங்கினார்கள். அப்பொழுது தான் மழை கொஞ்சம் நின்றது. மலைமேலுள்ள பட்டமரங்கள் நனைந்திருக்குமென்றும், எண்ணி அந்தக் கிராமத்தினுட் சென்று ஒரு தேங்காயோட்டில் சிறிது மண்ணெண்ணெயும், ஒரு கந்தைத்துணியும் சிலர் வாங்கி வந்தார்கள். மழை நின்றதென்றெண்ணிப் பிரயாணத்தை மறுபடியும் தொடங்கினார்கள். மலையின் அடிப்பாகத்திற்கு வந்து சேர்ந்தார்கள். மறுபடியும் கருமேகங்கள் அவர்களின் தலைக்கெதிரில் தோன்றின. மழையும் ஆரம்பித்தது. இரண்டாந் தட்வையும் அவர்கள் பூராவாய் நனைந்து விட்டார்கள். தூரத்தில் பார்த்தாலோ மலையுச்சிகளை மூடு பனி மறைத்து விட்டது. மலை ஏறினார்கள். பாதி மலை ஏறினதும் மழை நின்று விட்டது. சாரணர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு புதர்களில் புகுந்தும், பாரைகளின் மேல் ஏறியும் சென்றார்கள்.

மலையின் உச்சி சிறிது தூரமே இருந்தது. திடீரென்று மூடுபனியானது அவர்களைச் சுற்றிக் கொண்டது. அவர்களைச் சுற்றிலும் 4 அல்லது 5 அடிகளுக்கு அப்பால் யாதொன்றும் அவர்கள் கண்ணுக்குப் புலப்படவில்லை. வழி தெரியாமலே சிறிது தூரம் போனார்கள். அவர்கள் எங்கே போகிறார்களென்று அவர்களுக்கே தெரியவில்லை. எல்லாரும் கொஞ்ச நேரம் நின்றார்கள். உடனே சூரியன் பிரகாசித்தான். நாற்பக்கங்களிலும் சூழ்ந்துள்ள பனி சூரிய வெளிச்சத்தினால் வெண்மையாகப் பிரகாசித்தது. இரண்டு சாரணர்கள் வழிதெரிந்து கொண்டுவரப்புறப்பட்டார்கள். அப்பொழுதே காற்றும் அடித்தது. பனியும் மறைந்தது. இது வரையில் அவர்களுக்குக் காணப்படாத குன்று அவர்கள் முன்னதாகவே இருந்தது. மணியும் 10 ஆய்விட்டது. பசியும் வயிற்றைக் கிள்ளியது. ஆனால் சாரணர்கள் எல்லாரும் மலை உச்சியை அடைந்தார்கள். இன்னும் சமையல் செய்யவேண்டிய வேலை இருந்தது. இரண்டு பேர்கள் சமையல் செய்வதற்குத் தக்க இடத்தை நியமித்து சுத்தம் செய்யத்தொடங்கினார்கள். இரண்டு பேர்கள் பாத்திரங்களைச் சுத்தம் செய்யப் போனார்கள். இரண்டு பேர்கள் விறகு வெட்டிவரச் சென்றார்கள். மற்ற இருவர் சாப்பிடுவதற்கு வேண்டிய இலைகளைச் சேகரிக்க முயன்றார்கள். ஒருவராகிலும் சோம்பேறியாக விருக்கவில்லை. எல்லாரும் சுறுசுறுப்பாகவே வேலை செய்தார்கள். கூடிய சீக்கிரத்தில் சமையல் செய்வதற்கு இடமும் தயாராயிற்று. விறகும் வந்தது. பாத்திரங்களும் சுத்தம் செய்யப்பட்டன. தைப்பதற்கும் இலைகள் வந்தன. காலம் செல்லச் செல்ல சாரணர்களுக்குப் பசியும் அதிகரித்தது. சமயலை நான்கு பேர்கள் தான் கவனித்துக் கொண்டிருந்தார்கள். மீதிப்பேர்கள் இலைகளைத் தைப்பதற்கு ஆரம்பித்தார்கள். இரண்டு மணியாயிற்று. சமயலும் முடிந்தது. இலைகளும் தைத்தாய் விட்டன.

இரண்டு பேர் சாரணர் இலைகள் போட்டு சாதம் வடித்தார்கள். பிராமணர், சூத்திரர், மகம்மதியர் யாவரும்

சத்தமாக விருந்ததால் ஒரே பந்தியில் உட்கார்ந்தார்கள். சமையல் ஒரு குறைவு மில்லாமல் மிகவும் நன்றாக விருந்தது. பதார்த்தங்களெல்லாம் வீட்டில் செய்வதைக்காட்டிலும் நன்றாக விருந்தன. எல்லாரும் சாப்பிட்டானதும் சாரணர்கள் மலையின் மேல் சுற்றித்திரிந்து கொண்டிருந்தார்கள். ஓரிடத்தில் ஒரு பெரிய கற்பாறையானது செங்குத்தாக நின்றது. அதன் ஓரத்தில் போக மிகவும் பயமாயிருந்தது. அதன் ஓரத்தில் நின்று கொண்டாவது உட்கார்ந்து கொண்டாவது அடியில் பார்க்க யாருக்கும் தைரியமில்லாமல் போய் விட்டது. அந்தப் பாறையின்மேல் படுத்துக் கொண்டு தலையை மாத்திரம் ஓரத்தில் வைத்து எட்டிப் பார்த்தார்கள். இதனால், அவர்களின் சரீரம் ஓரத்திலிருந்து அதிக தூரம் நீண்டிருந்ததால் அவர்களுக்கு அவ்வளவு பயமுண்டாக வில்லை. சூரியனும் மேற்கு முகமாக இறங்கிக் கொண்டிருந்தான். சாயங்காலச் சிற்றுண்டி செய்யவேண்டியிருந்தது. உடனே உப்புமாவும் கொத்தமல்லிக் காப்பியும் செய்தார்கள். சிற்றுண்டி சாப்பிடுவதற்குள் ஐந்து மணி ஆய் விட்டது. சாரணர்கள் எல்லாரும் புறப்படத் தயாரானார்கள். எல்லாச்சாமான்களும் பத்திரமாக எடுத்துக் கொள்ளப்பட்டன. மலையுச்சியை விட்டு இறங்குவதற்கு ஆரம்பித்தார்கள். மலையின் அடிவாரத்தை அடைந்தார்கள். சூரியன் மேற்குத் திசையில் முற்றிலும் மறைந்து விட்டான். இருள் இவர்களைச் சூழ்ந்தது. விளக்கொன்றும் அவர்களிடத்தில் இல்லை. மெதுவாகப் போனவழியை பிடித்துக்கொண்டே வந்து கடைசியில் பெரிய பாதையை அடைந்தார்கள்.

ரோட்டின் மார்க்கமாக எல்லாரும்வந்து கடைசியில் சாரண அறையை அடைந்தார்கள். அப்பொழுது ராத்திரி 8-மணியாயிற்று. அங்கிருந்து அவர்கள் ஒருவர்க்கொருவர் வந்தனம் செய்து விட்டு சந்தோஷமாக அவரவர்கள் வீடு போய்ச் சேர்ந்தார்கள்.

இந்த விதமாக மலைப்பிரயாணம் போன சாரணர்கள் அநேக கஷ்டங்களை யனுபவித்தார்கள் என்பது இதைப் படிப்பவர்களுக்கு நன்ருகப் புலப்படும். ஆனல் அவர்கள் கஷ்டங்களை ஒரு பொருட்டாக நினைக்க வில்லை. பாதையின் வழியாகப் போய்க் கொண்டிருந்த பொழுது மழையால் அவர்கள் முற்றிலும் நனைந்தார்கள். ஆனல் மழையில் நனைந்தோமே இதென்ன கிரகசாரம் என்ற ஒருவரும் நினைக்கவில்லை. யாவரும் சிரித்த முகத்துடனே மழையில் போயினர். அவர்கள் எடுத்துக் கொண்ட காரியத்தில் என்ன கஷ்டம் வந்தாலும் அதை மிகவும் சாந்தமாக அநுபவிப்பார்கள். இது தான் சாரணர்களின் இலக்ஷணம். இதற்காகவே சாரணச் சங்கமும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இன்னும் சாரணர் மலைக்குப் போனபொழுது சாமான்களை யெல்லாம் அவர்களே சுமந்து கொண்டு போனர்கள். அவர்கள் தாம் செய்யக்கூடிய காரியங்களை இதரர்களைக் கொண்டு செய்ய மாட்டார்கள். இந்தக் காலத்தில் ஒருவன் ஏழாவது வகுப்பு வரையில் இங்கிலீஷ் படித்து விட்டால் அதற்குப் பிறகு அவன் கடைக்குப் போய் காய் கறி இலை வாங்கி வருவதும் மிகவும் நீசமான காரியங்களென்று நினைக்கிருன். அந்த எண்ணம் மனிதர்களை விட்டு பூராவாக நீங்கவேண்டும். தன்னுடைய வீட்டுக்குச் செய்யவேண்டிய காரியங்களில் அவனுக்கொரு மனவெறுப்பும் உண்டாகக் கூடாது. இந்த எண்ணத்தைச் சாரணச் சங்கம் சிறுபிள்ளைகளுக்கு உண்டாக்குகிறது. மலைக்குப் போனதில் மேற்சொன்ன சாரணர்கள் புதர்களில் புகுந்தும், பாறைகளின் மேல் ஏறியும் அநேக கஷ்டங்களைப் பட்டுக் கொண்டு போனர்கள் என்று சொன்னேமல்லவா? இன்னும் மாலை இரண்டு மணிவரையிலும் பசியுடன் இருந்தார்களென்று சொன்னேம். இவை யெல்லாம் ஒருவனுக்குப் பொறுமையை உண்டாக்குகின்றன. என்ன கஷ்டங்கள் வந்தாலும் ஒரு சிறுவன் அவைகளை மிகப் பொறுமையுடன் அநுபவிக்கவேண்டும். பொறுமை

என்ற குணம் ஒவ்வொரு சிறுவனுக்கும் இருக்கவேண்டியது அவசியம். தேசத்துக்கு ஒருவன் நிஜமாய் உழைக்க வேண்டுமென்றிருந்தால் அவன் பொறுமையை அடைந்திருக்க வேண்டும். தேச சேவை செய்வதில் அநேக கஷ்டங்கள் நேரிடக்கூடும். ஆகையால் தேச சேவை செய்வதில் பொறுமையடைந்திருக்கவேண்டும். சிறுவர்கள் இப்பொழுது சிறிய விஷயங்களில் பொறுமையை அப்பியாசித்தால் தான் தாம் கொஞ்ச காலத்துக்குப் பிறகு தேச சேவை செய்வதின் காரணமாக உண்டாகக் கூடிய பெரிய கஷ்டங்களைப் பொறுக்கலாம். ஆகையால் இந்த விஷயத்தில் சாரணச் சங்கம் மிகவும் உபயோகமாகிறது. சாப்பிடுவதற்கு இலைகளை யவர்களே தைத்துக் கொண்டார்களென்று சொன்னோம் எந்த விஷயத்திலும் சாரணர்கள் இதர ஜனங்களுடைய சகாயத்தைக் கோரவே மாட்டார்கள். தேசத்துக்கு உழைப்பவன் எப்படிப் பொறுமையுள்ளவனாயிருக்கவேண்டுமோ அப்படியே அவன் தைரியமுள்ளவனாயுமிருக்கவேண்டும் தைரியமிருந்தால் தான் வருங்கஷ்டங்களை மிகவும் பொறுப்புடன் சகிப்பார்கள். சாரணர்கள் மலைகளில் பாம்பு, முட்பன்றி, சிறுத்தைப்புலி முதலான துஷ்ட ஜந்துக்களுக்கு சிறிதும் பயப்படமாட்டார்கள். மலைகளில் போய் சஞ்சாரம் செய்வதினால் இன்னுமொரு முக்கியமான நன்மையுண்டாகிறது. பூர்வ காலத்தில் நம்முடைய பெரியோர்கள் எப்பொழுதும் கிராமங்களில் வசித்து மலைகளில், திரிந்து சுத்தமான வாயுவை சுவாசித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் நாட்கள் போகப்போக ஜனங்கள் பெரிய பெரிய பட்டணங்களில் வசிப்பதற்குப் பிரியப்படுகிறார்கள். பட்டணங்களில் காற்று அசுத்தமானது. ஆகையினால் ஜனங்கள் வியாதி அடைகின்றார்கள். ஆரோக்கியத்தை யுண்டு பண்ணுவதற்கு மலைச்சஞ்சாரம் மிகவும் உபயோகப்படுகின்றது. இன்னும் மலையில் திரிவதில் தேகம்பலப்படுகிறது. இன்னுமநேக விதங்களில் சாரணச்சங்கமானது சிறு பிள்ளைகளுக்கு உபயோகப்படுகிறது. இத்தனை நன்மைகளையும் சந்தோஷத்தையும் விளைவிக்கும் சாரணச்சங்கம் நீடூழி வாழ்க!

அ. ச. பெரியாழ்வார், மதனப்பள்ளி.

சிறுவர் பக்கம்.

க்ஷமை,

க்ஷமை என்பது நாம் ஒவ்வொருவரும் கைக்கொள்ள வேண்டிய நற்குணமாகும்.

க்ஷமிக்கவேண்டும் என்றால் மன்னிக்கவேண்டும் என்றர்த்தம்.

சிறுபிள்ளைகள் அடிக்கடி ஒருவரையொருவர் கோபித்துக்கொள்ளுகிறார்கள். ஒருவனுடைய சாமானை இன்னொருவன் எடுத்துவிட்டால் அவனுக்கு உடனே கடுங்கோபம் உண்டாகிறது. அவனை வாயில் வந்தபடி பேசுகிறான். சில சமயங்களில் அடிக்கவும் அடிக்கிறான். முன்காலத்து ரிஷிகள் இப்படித்தானா நடந்து வந்தார்கள்?

ஒருபோதுமில்லை. தங்களுக்கு எவன் தீங்கு செய்தாலும் கூட அவனை மன்னித்து விடுவார்கள். தங்கட்கு தீங்கு ஒருவன் செய்தான் என்று தெரிந்தாலும், அந்த ரிஷிகள் அப்படிப் பட்டவனுக்குப் பதில் தீங்கு செய்வது கிடையாது. தம்மிடத்து அபகாரம் செய்பவர்களுக்குக் கூட அவர்கள் உபகாரம் செய்வார்கள்.

நமக்குக் கெடுதல் செய்தவனைக்கூட நாம் மன்னிக்க வேண்டும் என்று தான் நம்முடைய வேதபுஸ்தகங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது.

"ஒன்றினிடத்திலாவது அல்லது ஒருவருக்காவது கெடுதலை எண்ணாமல், எல்லாப் பிராணிகட்கும் ஸ்நேஹமாகவும், இரக்கமுள்ளவனாகவும், க்ஷமை உள்ளவனாகவும் எவரெவர் இருக்கிறாரோ, அவரெல்லோரும் எனக்குப் பிரியமானவர்கள்." என்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் பகவத் கீதையில் சொல்லியிலிக்கிறார்.

ஙங்தேசத்திலிருந்த அநேக நல்லோர்கள் தமக்குப் பிறர் செய்த தீங்கை முற்றும் மறந்து, அவர்களை மன்னித்ததாக அநேகம் கதைகள் உள்ளன.

திருதராஷ்டிரன் என்ற அரசன் ஒருவன் இருந்தான். அவரது தம்பி விதுரரைப் பற்றித்தான் நான் உங்களுக்கு இப்போது சொல்லப்போகிறேன். திருதராஷ்டிரனுடைய மூத்த மகனாகிய துரியோதனன் மிகத்துற்குணமுள்ளவன். சாந்தமில்லாதவன். தன் தம்பிமாரோடு அடிக்கடி சச்சரவு போட்டு வந்தான். அவன் சிற்றப்பன் மக்களாகிய பாண்டவர்களை வெகு குரூரமாய் நடத்தி வந்தான். அவர்கள் ராஜ்யத்தையும் பிடுங்கிக் கொண்டான். அவர்களைக் காட்டுக்கும் விரட்டி விட்டான்.

திருதராஷ்டிரன் தம்பி ஆகிய விதுரரை அழைத்து விசாரித்தபோது அவா "துரியோதனன் அவசியம் பாண்டவர்களுடைய ராஜியத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டு அவர்களோடு சமாதானமாக வேண்டும். துரியோதனுதிகள்பாண்டவர்களை மன்னிப்புக் கேட்கவேண்டும்" என்று சொன்னார். விதுரர் தன் மகனைக் குற்றஞ்சாட்டுவதைப் பொறுக்காமல், திருதராஷ்டிரன் அவர் மீது கடுஞ்சினங் கொண்டான்.

அதனால் அரசன் விதுரரைக் கண்டவாறு தூஷித்தான், அவர்மேல் அநேகம் பழிகளைச் சுமத்தினான், பொய்யாக வெல்லாம் அவரைத் [தூற்றினான். விதுரனிடத்து அடங்காக் கோபங் கொண்டு அரசன் எழுந்து போய் விட்டான். ஆனால், விதுரரோ அதற்குப் பதிலாகக் கொஞ்சமும் கோபங் கொள்ளவில்லை. விதுரர் துக்கப்பட்டாரே யொழியக் கோபப்படவில்லை. பிறகு பாண்டவர்களிடம் போய் அரசன் மிக்கக் கோபங்கொண்டான் என்பதைச் சொன்னார். பாண்டவர்களுக்கும் அவர்கள் சாந்தர்களாகவேயிருக்கவேண்டும் என்று புத்திமதி கூறினார்.